18.07.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண். 43/2021</u>

அ.சா. 11

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாரியம்மாள் | | |
| க/பெ | காசிநாதன் | | |
| கிராமம் | பள்ளிப்புதுப்பட்டு | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 55/2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

**இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>**

**நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது** விவசாய கூலி வேலை செய்கிறேன். என் கணவரை காசிநாதன் என்றும் சங்கர் என்றும் அழைப்பார்கள். இந்த வழக்கில் இறந்துபோன ராஜ்கிரன், அவரது அம்மா வாசுகி ஆகியோர்களை எனக்கு தெரியும். எதிரிகள் தீபக் (எ) தீபக்ராஜ், சசி (எ) கஸ்தூரி, கலா ஆகியோர்களை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி லட்சுமணனை எனக்கு தெரியாது. ராஜ்கிரன் இறந்துவிட்டார். எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. ஆனால் அவரை யாரோ கொலை செய்து விட்டார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக என்னை காவல் துறையினர் விசாரணை செய்யவில்லை. ராஜ்கிரன் மனைவி ராஜ்கிரனுடன் ஒற்றுமையாக வாழ்ந்தாரா என்று எனக்கு தெரியாது.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை போலீசார் விசாரணை செய்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் நான் ராஜ்கிரண் வீட்டில் முன்புறம் உள்ள வீட்டில் நான் குடியிருக்கிறேன் என்றும், ராஜ்கிரன் மனைவி சசி என்கிற கஸ்தூரி வளவனூர் காலனியை சேர்ந்த தீபக்ராஜ்

என்பவருடன் கள்ளத்தொடர்பு ஏற்பட்டு வீட்டை விட்டு ஓடி விட்டதாகவும், சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு வீட்டிற்கு வந்ததாகவும், வந்தபிறகும் ராஜ்கிரனுடன் அடிக்கடி சண்டை போட்டு கொண்டிருந்ததாகவும், ராஜ்கிரன் இல்லாத சமயத்தில் தீபக்ராஜ் வீட்டிற்கு வந்துசெல்வதாகவும் சொன்னேன் என்றால் சரியல்ல. கடந்த 13.04.2019ம் தேதி காலை 6 மணி அளவில் ராஜ்கிரனின் பிரேதம் பள்ளியநேலியனூர் இரயில்வே கேட்டில் இருந்து புதுவை செல்லும் இரயில் பாதையில் கிடப்பதாக நானும் ஊர் ஜனங்களும் அருகில் சென்று பார்த்ததாகவும், அவருக்கு தலையில் பலத்த காயமும், கை, கால்களில் சிராய்ப்பு காயமும் இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. ஆனால் அன்று இரவு சுமார் 2.30 மணியளவில் குழந்தைகள் அழும் சத்தம் கேட்டு நான் பார்த்தேன் என்றும், அப்போது தீபக்ராஜும் மற்றொரு நபரும் பாயில் ஏதோ ஒன்றை சுருட்டி அவர்களுக்கு இடையில் மோட்டார் சைக்கிளில் வைத்து தூக்கி சென்றதாகவும், கஸ்தூரியும் அவரது அம்மா கலாவும் உடன் சென்றதாகவும், இதை பார்த்த நான் தீபக்ராஜுக்கு நிறைய வழக்குகள் உள்ளது என்ற விவரம் கேள்விபட்டதால் நமக்கு எதுக்கு வம்பு என்று நான் பயந்து சும்மா இருந்து விட்டேன் என்றால் சரியல்ல.

பின்னிட்டு தீபக்ராஜும், கஸ்தூரியும் ஆழியூர் மணியக்காரரிடம் சரண்டர் ஆகி ராஜ்கிரனை கொலை செய்த விவரம் குறித்து வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றும், அன்று இரவு மோட்டார் சைக்கிளில் பாயில் சுருட்டி எடுத்து சென்றது கோடாரியால் தலையில் வெட்டி கொலை செய்யப்பட்ட ராஜ்கிரனின் பிரேதம் என்பது எனக்கு தெரிய வந்தது என்றும் சொன்னேன் என்றால் சரியல்ல. எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை

மறுவிசாரணை

இல்லை